2 2 AUG 1995

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம்

---

*(1995, ஏப்பிறல் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1995 ஏப்பிறல் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 — தபாற் செலவு : ரூபா 2.00

1995 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம்.

[1995, எப்பிரில் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 68/92

மதுவரிக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மதுவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஒரு மாத காலத்தினுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நாலு மாத காலத்தினுள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — 52 ஆம அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு "இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்படாத மதுவரிக்குட்பட்ட பொருள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்படாத மதுவரிக்குட்பட்ட பொருள் அல்லது ஏதேனும் பொருளின் அதிகாரமளிக்கப்படாத களஞ்சியப்படுத்துதல் அல்லது விற்பனை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு "ஐயாயிரம் ரூபா" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐநூறாயிரம் ரூபா" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. பின்வரும் புதிய பிரிவு 58அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 58ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— — முதன்மைச் சட்டவாக்கத்தில் 58ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"விசேட சேவைகளுக்காகவும் வரவுக்காகவும் மதுவரி அலுவலருக்கான கொடுப்பனவு.

58 ஆ. (அ) ஒரு விசேட சேவையென மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் சேவையை ; அல்லது

(ஆ) அவரது உரிய அலுவலகம் அல்லது வேலை இடம் தவிர்ந்த ஏதேனும் அலுவலகம் அல்லது இடத்தில் எவரேனும் மதுவரி அலுவலரின் வரவை,

எவரேனும் ஆள் தேவைப்படுத்துகின்றவிடத்து, விடயத்துக்கேற்ப அத்தகைய சேவைக்கு அல்லது வரவுக்கு, மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் பதிக்கு அத்தகைய ஆளினால் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.".

குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் மதுவரி ஆணையாளர் தலைமையதி

2—D 034929—1,645 (95/02)

முதன்மைச் சட்டவாக்கத்துக்கும் வேறு எழுத்திலான சட்டத்துக்குமான திருத்தம்.

6. (1) முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின் அல்லது அத்தகைய எழுத்திலான சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட, செய்யப்பட்ட, தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலில், தகவல் படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில், "மதுவரி ஆணையாளர்" என்னும் சொற்றொடர் காணப்படுகின்றவிடமெல்லாம் அதற்குப் பதிலாக "மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி" என்னும் சொற்றொடரை இடுதல் வேண்டும்.

(2) எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டில், முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு மதுவரிப் பிரதி ஆணையாளரைக் குறிக்கின்ற "மதுவரிப் பிரதி ஆணையாளர்" அல்லது "பிரதி ஆணையாளர்" என்னும் சொற்றொடர் தோன்றுகின்றவிடமெல்லாம் அத்தகைய சொற்றொடர் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஒரு மதுவரி ஆணையாளரை உள்ளடக்குகின்றதெனக் கருதப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தங்கள் முதலியவற்றிற்கான பேணல்.

7. மதுவரி ஆணையாளரின் சார்பில் அல்லது அவரினால் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்னர் ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம், உடன்பாடு அல்லது வேறு எத்தன்மைத்தானதுமான சாதனம் அல்லது ஆவணம் ஒவ்வொன்றும், இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதற்குப் பின்னரும் மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியின் சார்பில் அல்லது அவரினால் ஆக்கப்பட்டதாக, வழங்கப்பட்டதாக அல்லது நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் வடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

---

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாட்டு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.